# நவம்பர் – 04 – சனி

## தீர்ப்பு வழங்கும் முறையில் மீண்டும் நீதி நிலவும்:
## திபா. 94:15

## முதல் வாசகம் : உரோமையர் 11:1 –2,11 –12,25 -29

சகோதர சகோதரிகளே, அப்படியானால் கடவுள் தம் மக்களைத் தள்ளிவிட்டார் என்று சொல்லலாமா? ஒருபோதும் இல்லை. நானும் ஓர் இஸ்ரயேலன், ஆபிரகாமின் வழிமரபினன், பென்யமின் குலத்தினன். தாம் முன்பே தேர்ந்து கொண்ட மக்களைக் கடவுள் தள்ளி விடவில்லை. இஸ்ரயேல் மக்களுக்கு எதிராகக் கடவுளிடம் எலியா முறையீடு செய்தது பற்றிய மறைநூல் பகுதி உங்களுக்குத் தெரியாதா? அப்படியானால், அவர்கள் தடுமாறியது அழிந்து போவதற்கா? ஒருபோதும் இல்லை. அவர்கள் தவறு செய்ததால் யூதரல்லாதாருக்கு மீட்புக் கிடைத்தது. அவர்களிடம் பொறாமையைத் தூண்டிவிடவே இவ்வாறு ஆயிற்று. அவர்கள் தவறியதால் உலகம் அருள்வளமுற்றது அவர்கள் வீழ்ச்சி யுற்றதால் பிற இனத்தார் அருள்வளம் பெற்றனர் அப்படி யென்றால், எல்லா யூதர்களும் நற்செய்தியை ஏற்கும்போது அருள்வளம் இன்னும் மிகுதியாகும் அன்றோ? சகோதர சகோதரிகளே, நீங்கள் அறிவாளிகள் எனக்கருதாதவாறு மறைபொருள் ஒன்றை உங்களுக்கு வெளிப்படுத்த விரும்புகிறேன். அதாவது, பிற இனத்தார் முழுமையாக இறைவனிடம் வந்து சேரும் வரையில் தான் இஸ்ரயேலில் ஒரு பகுதியினர் மழுங்கிய உள்ளம் கொண்டிருப்பர். பின்னர், இஸ்ரயேல் இனம் முழுவதும் மீட்கப்படும். "சீயோனிலிருந்து அவர் மீட்பராக வருவார் யாக்கோபில் தீயதனைத்தையும் போக்கிடுவார். நான் அவர்களு டைய பாவங்களை அகற்றிவிடுவேன் அவர்களுடன் நான் செய்து கொள்ளும் உடன்படிக்கை இதுவே" என்று மறைநூலில் எழுதியுள்ளது அல்லவா! நற்செய்தியை ஏற்றுக் கொள்ளாததால் அவர்கள் கடவுளுக்குப் பகைவர்கள் ஆயினர் அதுவும் உங்களுக்கு நன்மையாய் அமைந்தது. ஆனால் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாயிருப்பதால் அவர்களுடைய மூதாதை யரை முன்னிட்டு அவரது அன்புக்கு உரியவர்கள் ஆனார்கள். ஏனெனில், கடவுள் தாம் விடுத்த அழைப்பையும் கொடுத்த அருள்கொடைகளையும் திரும்பப் பெற்றுக் கொள்வதில்லை.

**பதில்பாடல் :** ஆண்டவர் தம் மக்களைத் தள்ளிவிடார்

## நற்செய்தி : லூக்கா 14 : 1,7 - 11

அக்காலத்தில் ஓய்வுநாள் ஒன்றில் இயேசு பரிசேயர் தலைவர் ஒருவருடைய வீட்டிற்கு உணவருந்தச் சென்றிருந்தார். அங்கி ருந்தோர் அவரைக் கூர்ந்து கவனித்தனர். விருந்தினர்கள் பந்தியில் முதன்மையான இடங்களைத் தேர்ந்து கொண்டதை நோக்கிய இயேசு அவர்களுக்குக் கூறிய அறிவுரை : "ஒருவர் உங்களைத் திருமண விருந்துக்கு அழைத்திருந்தால், பந்தியில் முதன்மையான இடத்தில் அமராதீர்கள். ஒருவேளை உங்களைவிட மதிப்பிற்குரிய ஒருவரையும் அவர் அழைத்திருக்கலாம். உங்களையும் அவரையும் அழைத்தவர் வந்து உங்களிடத்தில், "இவருக்கு இடத்தை விட்டுக்கொடுங்கள்" என்பார். அப்பொழுது நீங்கள் வெட்கத்தோடு கடைசி இடத்திற்குப் போக வேண்டி யிருக்கும். நீங்கள் அழைக்கப்பட்டிருக்கும்போது, போய்க் கடைசி இடத்தில் அமருங்கள். அப்பொழுது உங்களை அழைத்தவர் வந்து உங்களிடம், "நண்பரே, முதல் இடத்திற்கு வாரும்" எனச் சொல்லும்பொழுது உங்களுடன் பந்தியில் அமர்ந்திருப்பவர்கள் யாவருக்கும் முன்பாக நீங்கள் பெருமை அடைவீர்கள். தம்மைத்தாமே உயர்த்துவோர் யாவரும் தாழ்த்தப் பெறுவர் தம்மைத்தாமே தாழ்த்துவோர் உயர்த்தப்பெறுவர்" என்றார்.

**தியானம்:** இன்றைய இறைவார்த்தைகள் எங்களைத் தாழ்த்தி இறைவனிடம் எங்களை ஒப்புக்கொடுத்து வாழும் பொழுது எவ்வாறு அன்று பாகால் என்ற தெய்வத்திற்கு மண்டியிடாத 7ஆயிரம் பெயரை இறைவன் பாதுகாத்து வழிநடத்தினார். அதேபோன்று எங்களையும் வழிநடத்துவார் என்பதை தெளிவுபடுத்துகின்றது. ஆனால் இன்று இறைவன் விரும்பியபடி நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோமா? ஏனென்றால் மற்றவர்கள் மத்தியில் நாங்கள் பெரியவர்கள் என்ற உணர்வுடன் எங்களை உயர்த்தியவர்களாய் மற்றவர்களைத் தாழ்த்தி வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஆனால் இதை அவர் எதிர்பார்க்கவில்லை. ஏனெனில் பெரிய வியாழன் அன்று அவர் சீடர்களின் பாதங்களைக் கழுவி முத்தமிட்டு அன்புடன் தாழ்ச்சியுள்ளங்கொண்டு வாழும்படி செய்தும் காட்டினார். அவற்றை நாங்கள் மறந்து ஏனோதானோ என்று வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். நாங்கள் வழிபட்ட கடவுளை சமய விதிமுறைகள், வழிபாட்டு முறைகள், இவ்வாறு பலவகையான சம்பவங்களினால் சிறிது சிறிதாக மறந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஒன்றை மட்டும் நாங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். இறைவனைத் தவிர, வேறு தெய்வங்களையோ, அல்லது எமது சந்தர்ப்பத்திற்கேற்ப வேறு சமய விதிமுறையையோ பின்பற்றி வாழவோமேயானால் அவர் மன்னிப்பவர், இருப்பினும் சினங்கொள்ளத் தாமதிப்பவர். எனவே அவரின் சினத்திற்கு உட்படாதவாறு அவரிடம் எங்களை ஒப்புக்கொடுத்து அன்று பாகாலுக்கு மண்டியிடாது அவரை மட்டும் மண்டியிட்ட 7ஆயிரம் பேரை எவ்வாறு பாதுகாத்தாரோ அதேபோன்று எங்களையும் பாதுகாக்க அவரிடம் எங்களை ஒப்புக்கொடுப்போம்.